ஸ்ரீ:




ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீ உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை வித்வத் ஸார்வபௌமர் குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி வைபவச் சுருக்கம்

இம்மஹாஸ்வாமியின் ***3-ஆவது ஷஷ்ட்யப்தபூர்த்தியை***
***[180 ஆவது வருஷம்]*** முன்னிட்டு வெளியிடப்பெற்றது.

http://acharya.org




ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்ய ஜகத்விக்யாத
வித்வத்ஸார்வபௌம வித்வதக்ரேஸர இத்யாதி பெருமாள்கோயில் மலையடி குன்றபாக்கம்
பெரியதிருமலை திருப்பதி அனந்தாண்பிள்ளை ஸ்ரீநிவாஸாசார்யர் மஹாஸ்வாமி
திருவவதாரம் - ஸ்ரீபராங்குஶ திருவவதார ஞூ (4942) ப்லவ ஸம்வத்ஸரம் ஐப்பசியில் ம்ருகஶீர்ஷம்

http://acharya.org

ஸ்ரீ:



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

# ஸ்ரீ உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை வித்வத் ஸார்வபௌமர்

# குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

(அம்ருதலஹரியில் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ.வே. அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின் கட்டுரை)

கலி ஹு 4942, ப்லவ ஸம்வத்ஸரம், ஐப்பசி மாதத்தில் (கி. பி. 1841, நவம்பர்) மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் திருப்பதியில் மாதுலக்ருஹத்தில் இந்த மஹாபுருஷர் அவதரித்தார்.

இவரது திருத்தகப்பனார்-**அனந்தாசார்ய ஸ்வாமி**. திருத்தாயார்-**மங்கம்மாள்**. எம்பெருமானார் நியமித்தருளிய எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் ஒருவரான அனந்தாழ்வானுடைய திருவம்சத்தில் திருவவதரித்தவர்.

காஞ்சீபுரத்திற்கு வடகிழக்கு மூலையிலுள்ளதும், வெகுகாலமாகவே அபிஜாதர்களாலும் வித்வான்களாலும் அலங்கரிக்கப் பெற்றதுமான குன்றபாக்கம் என்னும் அக்ரஹாரத்தில் இந்த ஸ்வாமியின் முன்னோர்கள் வஸித்து வந்தார்களானாலும் இவர் ஸ்ரீ காஞ்சீபுரியிலேயே தமது வாழ்நாளைப் பெரும்பாலும் கழித்திருக்கிறார். நான்கு ஶாஸ்திரங்களிலும் பரிபூர்ணமாக அவகாஹித்தவராயினும் ந்யாய-வேதாந்த ஶாஸ்த்ரங்களில் எக்காலத்திலும் நிகரற்றவரென்று எண்டிசையும் புகழோங்கநின்றவர் இவர் ஒருவரேயாவர்.

பெரிய காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்தின் அருகில் ஓர்



http://acharya.org

ஸம்ஸ்க்ருத பாடசாலையில் காவ்ய-நாடக-அலங்காராதி ஸாஹித்ய க்ரந்தங்களில் அதிக பாகமும், ந்யாய ஶாஸ்த்ரத்தில் ப்ரகரண பாகமும் அதிகரித்தார். வியாகரண ஶாஸ்த்ரமும் திவ்யப்ரபந்தமும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் தமது திருத்தகப்பனாரிடத்தில் அதிகரித்தார். அக்காலத்தில் மிக ப்ரஸித்தராயிருந்த **சோஹத்தூர் விஜயராகவாசாரியர் ஸ்வாமி**யிடத்தில் ந்யாய ஶாஸ்திரத்தைப் பரிபூர்ணமாக வாசித்தார். **ஸ்ரீ எம்பா.வேங்கடாசார்ய ஸ்வாமி** ஸந்நிதியில் வேதாந்த ஶாஸ்திரத்தைப் பரிபூர்ணமாக க்ரஹித்தார்.

இந்த மஹாபுருஷர் ந்யாய ஶாஸ்திரத்தில் விடாமுயற்சியோடு பெற்றிருந்த பாண்டித்யத்தின் பெருமை மஹா மஹா பண்டிதர்களுக்கும் மிக வியக்கத்தக்கதாகவேயிருந்தது. அக்காலத்தில் இவரால் அலங்கரிக்கப்படாத ராஜஸபை ஒன்றுகூட இல்லை. வட இந்தியாவில் பலகால் யாத்திரை செய்து ஒவ்வொரு ராஜஸம்ஸ்தானத்திலும் விசேஷ வாக்யார்த்தங்கள் சொல்லி வீறு பெற்று விளங்கினார்.

வடமதுரையில் ப்ரவஸித்தராயிருந்த **லக்ஷ்மணதாஸ் ஸேட்ஜீ** இவரிடம் மிகுந்த பக்திமானாக இருந்ததால் சிறிது காலம் இவர் ப்ருந்தாவனத்தில் வஸித்தார். வித்வான் என்று பேர் பெற்றவர் எந்த மதத்தினராக இருந்தாலும் எந்த தேசத்தவராக இருந்தாலும் இந்த ஸ்வாமியை அப்போது அறியாதார் ஒருவருமில்லை. வடதேசங்களில் **சிங்களாச்சாரியர்** என்று இவர்க்கு ப்ரஸித்தியிருந்ததாம். அத்திருநாமம் செவிப்பட்டவாறே கையெடுத்துக்கும்பிடாதார் ஒருவரும் இருந்திருக்கவில்லை.

இவருடைய ப்ரதிபாசக்தி மிக விலக்ஷணமானது. மஹாஸதஸ்ஸுகளில் நிர்ப்பயமாய் வாதம் செய்யும் ஆற்றல் இவர்க்கே அஸாதாரணமாயிருந்தது. ப்ரதிவாதிகள் சொல்லும் கோடிகளின் மேல் சிறிதும் தாமதமின்றியே வெகு கம்பீரமாக ப்ரதிகோடி சொல்லுவர். பெரிய வித்வான்களும் இவருடைய தத்காலஸ்பூர்த்தியைக்கண்டு ஆச்சரியப்படுவர்கள். ந்யாயம், வேதாந்தம் என்ற இரண்டு ஶாத்ரங்களிலும் ஒரு நிகராகவே இவர் கோடிக்ரமங்கள் கூறுவர். எந்த ஸபையிலும் முதல் ஸத்காரம் இவருடையதாகவேயிருந்தது.



http://acharya.org

ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களிலும் ரஹஸ்யப்ரஸ்தானத்திலும் மிகத் தெளிவான ஞானம் பெற்றிருந்தார். உபயவேதாந்த ரஹஸ்யக்ரந்தங்களை சிஷ்யர்களுக்குப் பலகால் ப்ரவசனம் செய்தருளினர். உலகம் புகழ எழுந்தருளியிருந்த அடியேனது திருத்தகப்பனர் இந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே உபய வேதாந்த க்ரந்தகாலக்ஷேபம் செய்தவராதலால் இவருடைய ஞானப் பெருமைகளைப்பற்றி அநுக்ஷணமும் அதிசயித்துக் கூறக்கேட்டிருக்கை.

சின்னகாஞ்சிபுரம் ஸந்நிதி வீதியிலுள்ள ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஸம்ஸ்க்ருத பாடசாலை ஸ்தாபித்து, வெகுகாலம் நடத்திவந்தார் இந்த ஸ்வாமி. இவரிடம் பல வித்யார்த்திகள் நியாயவேதாந்த ஶாஸ்த்ரங்கள் பயின்று புகழ் பெற்றுர்கள். சிலர் உயர்ந்த பதவிகளிலும் வாழ்ந்தார்கள். **எலத்தூர் கிருஷ்ணசார், வாயி நாராயணசார்** முதலான ஸுப்ரஸித்த வித்வான்கள் இவருடைய வித்யார்த்திகளே. **ஸ்ரீமான் உ. வே. தி. அ. பு. க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி** தற்காலம் திருப்பதி ஸம்ஸ்க்ருத காலேஜில் ஶாஸ்த்ரோபாத்யாயர்களில் ப்ரதான ஸ்தானத்தை அலங்கரித்து வருபவர், இந்த ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யராவர்.

இந்த மஹாபுருஷர் செய்தருளியுள்ள க்ரந்தங்களில் **தத்த்வரத்நாவளி** யென்ற வேதாந்த க்ரந்தம் ஒப்புயர்வற்றது. இந்த ஸ்வாமியை சென்னைப் பட்டணத்திலுள்ள சில மஹநீயர்கள் அடிக்கடி ஆங்கு வரவழைத்து வேதாந்த தத்த்வங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது இவருடைய ஆச்சரியமான ஞானம் பின்புள்ளார்க்கும் பயன்பட வேணுமென்று கருதி வேதாந்த ஶாஸ்திரத்தில் சிறந்த நூல்களை நிருமித்தருள வேணுமென்று பலர் பிரார்த்தித்தார்கள். ஏற்கனவே **மைஸூர் அனந்தாழ்வான் ஸ்வாமி, வேதாந்த வாதாவளிகள்** அருளிச்செய்திருக்கையாலே, இன்றளவும் ஒருவரும் செய்யாததும், இனிமேலும் ஒருவராலும் செய்ய முடியாததுமான மஹோபகாராத்தைச் செய்தருளத் திருவுள்ளம்பற்றி **தத்த்வரத்நாவளி** என்கிற ஆச்சரியமான க்ரந்தத்தை **மணிமஞ்ஜூஷிகை** என்கிற வியாக்கியானத்தோடுங்கூட அருளிச்செய்தார். ஸ்ரீபாஷ்யத்தை



http://acharya.org

ஸ்ரக்தராவ்ருத்தத்திலிட்டு ச்லோக ரூபமாகச் செய்தருளியிருக்கும் க்ரந்தமே தத்வரத்நாவளி என்பது. பெரும்பாலும் ஸ்ரீபாஷ்யத்திலுள்ள சப்தங்களையே இதில் புகவிட்டிருப்பது மிகவும் அதிசயிக்கத்தக்கது. ஸ்ரீபாஷ்யார்த்தங்களை (ஓரெழுத்தும் விடாமல்) சுலோகமாக அமைப்பதும், அதிலும் ஒரு குறிப்பிட்ட விருத்தத்தில் அழகாக அடக்கியமைப்பதும் இந்த மஹான் ஒருவர்க்கே ஸுகஸாத்யமாயிற்று. ஏறக்குறைய அறுபத்தைந்து திருநக்ஷத்திரங்களுக்குப் பிறகே இந்த க்ரந்தம் அருளிச்செய்யத் தொடங்கினர். அதனால் க்ரந்தம் அபூர்ணமாகவே நின்றிட்டது. முதலத்யாயம் மூன்றுபாதம் வரையில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. சென்னை **சிங்கம் செட்டி சாரிடியார்** நாலாயிரம் ரூபாய்க்கு மேல் உதவி செய்து அந்த மஹாக்ரந்தத்தை வியாக்கியானதோடும் தெலுங்கு லிபியில் அச்சிடுவித்துள்ளார்கள். அபேக்ஷிதர்களுக்கு, இனமாகவும் தங்கள் சாரிடியிலிருந்து அன்புடன் நாளைக்கும் வழங்கிவருகிறார்கள். அபூர்ணமான இந்த க்ரந்தத்தை இதே சைலியில் பூர்த்தி செய்யுமாறு பலபல வித்வான்களை ப்ரார்த்தித்தும் ‘இக்காரியம் நெஞ்சால் நினைப்பரிதால்’ என்றே ஒவ்வொருவரும் சொல்லும்படியாகவுள்ளது. ஈதொன்றே இந்த ஸ்வாமியின் மஹா பாண்டித்யத்திற்கும் அப்ரதிம ஶக்திக்கும் சான்றாக உள்ளது.

தர்க்க ஶாஸ்திரத்தில் பல **க்ரோட பத்திரங்களும்** அருளிச் செய்திருக்கிறார். ஆனால் அவை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் **அச்யுத ஸந்நியாஸி** என்றொரு அத்வைத மஹாவித்வான் தக்ஷிணதேச யாத்திரை செய்து ஆங்காங்கு விஶிஷ்டாத்வைதமதப் பண்டிதர்களை வாதப் போருக்கழைத்தார். அவரவர்கள் பராஜிதாய்விட்டார்களென்று ஜயபேரியடித்துக்கொண்டு காஞ்சீபுரத்திற்கும் வந்து பேரருளாளன் ஸந்நிதியில் வஸந்தோத்ஸவ மண்டபத்தில் வாதம் நிகழ்த்த வேணுமென்று ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர்களுக்குப் பறை சாற்றினார். அப்போது அவ்விடத்தில் பெரிய வித்வானாக விளங்கிய **மஹாமஹோபாத்யாய திருப்புட்குழி அப்பா ஸ்வாமி** என்பவர் தாம் வாதிப்பதாக வந்து, அந்த அத்வைத வித்வான் தர்க்க ஶாஸ்திரத்தில் பாரங்கதராக இருந்தபடியால் அவருடைய வாதத்தை க்ரஹித்துக்கொள்வதே



http://acharya.org

ஶ்ரமஸாத்யமாக இருக்கிறதென்று சொல்லி மீண்டுவிட்டார். அவருடைய திருக்குமாரரும், அவரில் மிஞ்சிய ஜ்ஞாநாதிகருமான **ஸ்ரீ பட்டணுஸ்வாமி** யென்பவர் மறுநாள் தாம் வாதம் செய்வதாக வந்து அவரும் மீண்டனர். அந்த ஸமயத்தில் இந்த ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி திருமலை யாத்திரையாக எழுந்தருளியிருந்தாராம். திருப்புட்குழியப்பா இந்த ஸ்வாமியை விரைவாக எழுந்தருளும்படி வரவழைத்தபின் வாதயுத்தம் ஆரம்பமாயிற்று. அரைமணி அவகாசத்திற்குள் அந்த ஸந்நியாஸி எழுந்து நமஸ்கரித்துவிட்டு, ''தங்களோடு வார்த்தை சொல்லவும் நான் அசக்தன்'' என்று சொல்லிவிட்டு, பிறகு இரண்டு மூன்று நாள்கள் ஸ்வாமியிடத்தில் சிஷ்யவ்ருத்தி செய்து பல பல அபூர்வ விஷயங்களைத் தர்க்க-வேதாந்தங்களில் தெரிந்து கொண்டு போனதாக ப்ரஸித்தமாய்ப் பெரியார் சொல்லிப் போருவர்கள். அப்போது பெரிய வித்வானுயிருந்த **ஸ்ரீ தண்டிரி. பட்டப்பா தாதாசாரியர்**

**''அச்யுதநாமா பி$_4$க்ஷு: ப்ரச்யுதநாமாऽப$_4$வத்$_3$ யதீ$_3$யாக்$_3$ரே ।**
**ஸோऽயம் ஸ்ரீவாஸகு$_3$ரு: ஜயதாத் ஜயதாத் சிரம் ஸமா ஜயதாத் ॥''**

என்று தொடங்கிச் சில ஸ்லோகங்களை அந்த வாதஸபையில் வாசித்ததாகவும் ப்ரஸித்தம்.

இந்த ஸ்வாமி விஷயத்தில் இப்படிப்பட்ட இதிஹாஸங்கள் பல பல உண்டு. இன்னமும் ஆங்காங்குப் பெரியார் கூறிப் போருவார்கள். திருப்புட்குழி அப்பாஸ்வாமி யென்பவர் இவரைவிட வயதில் மிகவும் மூத்தவராயிருந்தாலும் இவரிடத்தில் ஆசார்ய ப்ரதிபத்தியை வைத்திருந்தார். இருவர்க்கும் சில சமயங்களில் ந்யாய வேதாந்த சர்ச்சைகள் நேருமாம். அப்போது திருப்புட்குழி ஸ்வாமி இவரைக் கொண்டாடிக்கொண்டே எழுந்தருளி விடுவர் என்று பெரியார் பகரக் கேட்டிருக்கை. இந்த ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியின் திருமாளிகைக்கு எதிர்வாடையில் திருப்புட்குழி ஸ்வாமியின் திருமாளிகை இருந்தது. அங்கு அவர் நிஸ்ஸங்கோசமாக ப்ரவசனங்கள் செய்யகில்லாமல் வேகவதிக்கரையில் ஸ்ரீரங்கராஜவீதியில் ஒரு குடில் அமைத்துக்கொண்டு அங்கே ஏகாந்தமாகக் காலக்ஷேபம் செய்துவந்தார் என்றும் ப்ரஸித்தம்.



http://acharya.org

ந்யாயஸித்தாஞ்சனத்திற்குத் திருப்புட்குழி ஸ்வாமி **ரத்நபேடிகை** என்றொரு வியாக்கியானமெழுதி அதில் அநாவச்யகமாக ஸத்ஸம்ப்ரதாயார்த்த தூஷணங்களை நிரப்பியிருந்தார். அது அச்சாகி இந்த ஸ்வாமியின் கடாக்ஷத்திற்கு வந்ததும் **''ரத்நபேடீசபேடிகை''** என்றொரு க்ரந்தம் திருவவதரித்தது.

மைஸூர் அனந்தாழ்வான் அருளிச்செய்த **ந்யாயபாஸ்கர** க்ரந்தத்திற்கு ஒரு அத்வைதி வித்வான் முப்பது வருஷங்களுக்கு முன் கண்டன மெழுதினர். ஆனல், குன்றபாக்கம் ஸ்வாமி பரமபதத்திற்கு எழுந்தருளின பிறகுதான் அதை வெளிப்படுத்தப் போகிறதாகவும் அவரே சொல்லிக் கொண்டிருந்து, அப்படியே இந்த ஸ்வாமி திருநாட்டுக் கெழுந்தருளின பின் அச்சிட்டு வெளியிட்டார். ''குன்றபாக்கம் ஸ்வாமி ஒருவர் தவிர, அதனைக் கண்டிக்க வல்லவர் வேறு ஒருவரும் இருக்க முடியாது'' என்று அந்த அத்வைதி வித்வான் கொண்டிருந்த நம்பிக்கை வெற்றி பெற்று வருகிறது.

இன்னமும் இந்த ஸ்வாமியின் ப்ரபாவ விசேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க. இவர் தம் 73-ஆவது திருநக்ஷத்ரத்திலே ஆனந்த ஸம்வத்ஸரத்தில் கன்யாமாஸத்தில் ஶுக்ல தஶமி அன்று திருநாட்டுக்கெழுந்தருளினர். இவர்க்கு ஒரு திருக்குமாரர் வக்கீல் பதவியில் வாழ்கிறர்.



http://acharya.org

## *ஸ்ரீராமாநுஜனில் ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியின் கட்டுரை*

ஸ்ரீ காஞ்சீபுரியானது முற்காலத்தில் பிரபல வித்யாபீடமாக விளங்கிக் கொண்டிருந்ததென்பதை எந்நாட்டினரும் அறிவர். ஏறக்குறைய 40 வருஷங்களுக்குமுன் இம்மஹா நகரத்தில் த்ரிமதஸ்தர்களிலும் பிரபல வித்வான்கள் சதுஃஶாஸ்த்ர பண்டிதர்களென்று புகழ்பெற்று விளங்கிக் கொண்டிருந்தார்கள். அன்னவர்களில் **குன்றபாக்கம் ஸ்வாமி**யென்றே ப்ரஸித்திபெற்றிருந்த மஹாஸ்வாமி ஈடுமெடுப்புமில்லாத வித்வத் ஸார்வபௌமராக விளங்கியவர். **‘குன்றபாக்கம் சீமாச்சார்ஸ்வாமி’** யென்றே இவர்க்கு ப்ரஸித்தி. வடதேசங்களில் **சிங்களாசார்ஸ்வாமி** யென்று ப்ரஸித்தி. இந்த ஸ்வாமி சதுஃஶாஸ்த்ரங்களிலும் வல்லவரெனினும் நியாய வேதாந்தங்களில் அநிதர ஸாதாரணமான வைதுஷ்யம் பெற்றிருந்தார். நியாய சாஸ்த்ரத்தில் யார் எத்தனை கோடிகள் சொன்னாலும் இந்த ஸ்வாமியின் கோடியே மேம்பட்டு நிற்கு மென்று ஸகல வித்வான்களும் ஏககண்டமாகச் சொல்லுவார்கள். ஸ்வாமியினுடைய திருமாளிகை சின்னகாஞ்சிபுரம் ஸன்னிதி வீதியிலுள்ளது. அந்த வீதியிலேயே ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஸ்வாமியினுடைய தலைமையில் ஸம்ஸ்க்ருத பாடசாலை 20 வருஷகாலம் வெகு சிறப்பாக நடந்து வந்தது. அதில் நியாய வேதாந்த ப்ரவசனம் செய்து பலபேர்களை சாஸ்த்ராதிகாரிகளாக ஆக்கியருளினர்.

(1) ஷஷ்டி ஸ்ரீநிவாஸவரதார்ய ஸ்வாமி
(2) புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி
(3) ஈச்சம்பாடி ராமாநுஜாசார்ய ஸ்வாமி
(4) ஈச்சம்பாடி திருமலாசாரியர் ஸ்வாமி
(5) ஈச்சம்பாடி பெரிய வரதாசார்ய ஸ்வாமி
(6) விஞ்சிமூர் ஸ்ரீ நிவாஸாசாரியர் ஸ்வாமி

மற்றும் பலரும் மேலே குறித்த குன்றபாக்கம் ஸ்வாமி ஸன்னிதியில் சாஸ்த்ராப்யாஸம் செய்தவர்கள்.

இம்மஹாஸ்வாமி திருவல்லிக்கேணியில் வேதவேதாந்தவர்த்திநீ ஸபையில் நியாய வேதாந்தங்களுக்குப் பரீக்ஷாதிகாரியாக எழுந்தருள்வது



http://acharya.org

வழக்கமாம். ஒரு வருஷம் இரு வித்யார்த்திகள் ஸ்ரீபாஷ்யத்தில் பரீக்ஷயர்களாக வந்தார்களாம்; இருவர்க்கும் கொடுத்தருளின பரீக்ஷாபத்ரிகைகளின் உத்தரங்களை ஸோதிக்கும் போது ஒருவருவர்க்கு (அஜ்ஞானம்) என்றும், மற்றொருவர்க்கு (அந்யதா-ஜ்ஞானம்) என்றும் பெயரிட்டு அஜ்ஞான நபர்க்குப் பூர்ண ஸன்மானமும், அந்யதாஜ்ஞான நபர்க்குப் பயணச் செலவு மட்டும் கொடுப்பித்தாராம். 'இப்படி திருவுள்ளம்பற்றினதற்கு என்ன காரணம்?' என்று கூடவிருந்த வித்வான்கள் கேட்க, அதற்கு அந்த ஸ்வாமி ஸாதித்தாராம்-''அஜ்ஞானமென்று பேரிடப் பெற்றவர் (ஸ்ரீபாஷ்ய) க்ரந்தத்தின் அருகேயும் சென்றவரல்லர்; வினாக்களுக்கு அபார்த்தமாக ஒன்றும் விடையெழுதாமலிருந்தார்; ஸ்ரீஸூக்திக்கு ஒன்றும் ஹாநியில்லாமே போயிற்று. அந்யதாஜ்ஞானமென்று பேரிடப் பெற்றவர் பலபல ஸ்ரீஸூக்திகளுக்கு அபார்த்தங்களையே எழுதி வைத்து ஸ்ரீஸூக்திகளுக்கு ஹாநியை விளைத்தார்; இப்படிப்பட்ட இவரை விட முந்தினவர் மேம்பட்டவர்தானே? என்று. அது கேட்ட எல்லாரும் 'யுக்தம்! யுக்தம்!!' என்றார்களாம்.



http://acharya.org

## ஸ்ரீ உ. வே. M. A. V ஸ்வாமி தொகுத்தருளிய யோகி பார்த்தசாரதி ஸ்வாமியின் வைபவத்திலிருந்து

யோகி பார்த்தசாரதி ஐங்கார்ய ஸ்வாமி, ஸ்ரீ கீதாசார்யன் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஸ்ரீகாஞ்சீ மண்டலத்தில் ப்ரஸித்த வித்வானாக எழுந்தருளியிருந்த மஹாவித்வான் குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியை திருவல்லிக்கேணிக்கு வரவழைத்து அவரிடத்தில் தர்க்கம், வேதாந்தம் முதலியவற்றை வாசித்து, ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபத்தையும் தொடங்கினார்.

மேலும், பகவத்விஷயத்தை ஆரம்பிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றி, அதற்கு வேண்டும் ஸ்ரீகோசங்களை அதாவது திருக்குருகைபிரான்பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படி, நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி, நம்பிள்ளை அருளிச்செய்த ஈடு முப்பத்தாறாயிரப்படி, அழகிய மணவாளச் சீயர் அருளிச் செய்த பன்னீராயிரப்படி, ஆகிய ஐந்து வ்யாக்யானங்களையும், மணவாளமாமுனிகள் அருளிச் செய்த ப்ரமாண திரட்டு, ஆத்தான் ஜீயர் அருளிச் செய்த அடையவளைந்தான் அரும்பதம், குணகரம்பாக்கம் ராமாநுஜ ஜீயர் என்னும் சேர்க்கை ஜீயர் அரும்பதம் என்னும் இதுக்கு வேண்டிய வ்யாக்யானங்களை யெல்லாம் கோயில் திருமலை திருநாராயணபுரம் ஆழ்வார்திருநகரி முதலான திவ்ய ஸ்தலங்களுக்கு ஸ்வாமிகளை அனுப்பி அங்குள்ள ஸ்ரீகோச ங்களை சேர்த்து பகவத் விஷய காலக்ஷேபத்தைத் தொடங்கினார். இந்த க்ரந்தங்களையெல்லாம் சாதித்தருளுவதற்காக ஐந்து மஹாவித்வான்களைச் சேர்த்து, அதாவது **வித்வான் குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியர்**, ஆத்தான் கிருஷ்ணமாசாரியர், ஜீயர் ஸந்நிதி வாத்யார், கோமடம் ஸ்ரீநிவாஸாச ாரியர் ஆகியோரையும், இன்னும் பல ச்ரோதாக்களான நல்லான் ரங்காச ார்யர், சித்ரகூடம் திருவேங்கடாசார்யர், அரசாணிபாலை கிருஷ்ணமாச ாரியர் முதலானோரையும், இன்னும் அநேக ஸ்த்ரீகளும் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களையும் சேர்த்து பெரிய ஓலக்கமாய் பகவத்விஷய காலக்ஷேபத்தை நடத்தி வந்தார்.

* * *



http://acharya.org

## *குன்றப்பாக்கம் மஹாஸ்வாமியின் திவ்ய க்ருதிகள்*

(1) **அவச்சேதகதாஸர கண்டணம்:- கதாதர பட்டாசார்ய**ரினுடைய **ஹேத்வாபாஸ ஸாமாந்யநிருக்தி** க்ரந்தத்தை அவலம்பித்து **அவச்சேதகதா-ஸரம்** என்கிற ப்ரௌடமான ஒரு க்ரோடபத்ரத்தை இயற்றியருளினர் திருப்புட்குழி அப்பா ஸ்வாமி. அந்த க்ரொடபத்ரத்திற்கு ப்ரதிபங்க்தி கண்டணமாக அருளிச்செய்யப்பட்ட க்ரந்தம்தான் இந்த அவச்சேதகதாஸர கண்டணம் என்னும் க்ரொடபத்ரம். **நவ்யந்யாய** ஶாஸ்த்ரத்திலே மிக ப்ரௌடமான விசாரங்களைக் கொண்டதாய், ஜடிலமான பரிஷ்காரங்களுடன் கூடியதான, இந்த க்ரந்தம் பரிஷ்காரப்ரியர்களுக்கு பரம போக்யமானதாகும். ஆனல் இந்த க்ரந்தம் இன்னும் கையெழுத்துப் ப்ரதியாகவே அமைந்துள்ளது. **ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரி மஹாஸ்வாமி**யினுடைய திருமாளிகையிலே அவர்தம் கையெழுத்திலே இக்ரந்தம் அமைந்துள்ளது.

(2) **ரத்நபேடீசபேடிகா** - ந்யாயஸித்தாஞ்ஜநத்துக்கு திருப்புட்குழி அப்பா ஸ்வாமி ரத்நபேடிகை என்னும் வ்யாக்யாநத்தை இயற்றி, அதிலே நம் தென்னசார்ய ஸத்ஸம்ப்ரதாய ஸித்தங்களான சில அர்த்த விஶேஷங்களைக் கண்டித்துள்ளார். அவைகளுக்கு முழுவதுமாக மறுப்பைத் தெரிவிக்கும் வண்ணமாக அவதரித்த க்ரந்தம்தான் இந்த ரத்நபேடீசபேடிகை. சபேடீ என்றுல் கையினுல் கண்ணத்திலே ஓங்கி அறைதல் என்று பொருள். இக்ரந்தத்தினை பலகால் தம்முடைய **ஸம்ப்ரதாயசந்த்ரிகா - டிப்பணி**யிலே காஞ்சீ ஸ்வாமி குறிப்பிட்டுள்ளார்.

(3),(4) **ஸ்ரீபாஷ்ய தத்த்வரத்நாவளி** மற்றும் அதன் வ்யாக்யாநமான **மணிமஞ்ஜூஷா - பகவத் ராமாநுஜர்** அருளிச்செய்த **ஸ்ரீபாஷ்யம்** என்னும் மஹாக்ரந்தத்திலே காணக்கிடைக்கக்கூடிய அனைத்து தத்த்வரத்நங்களை தொகுத்து பரமபோக்யமான ஶ்லோக வடிவங்களிலே அமைத்து அருளிய க்ரந்தம்தான் **ஸ்ரீபாஷ்ய தத்த்வரத்நாவளி**. 21 அக்ஷரங்கள் கொண்ட **ஸ்ரக்தராவ்ருத்தத்திலே** வேதாந்த அர்த்தங்களை எடுத்துரைப்பது என்பது நம் ஸம்ப்ரதாயத்திலே பெரியோர்கள் காட்டிய வழக்கு. **வேதாந்தாசார்யர்**



http://acharya.org

**தத்த்வமுக்தாகலாபம்** மற்றும் **அதிகரணஸாராவளி** ஆகிய க்ரந்தங்களை இந்த வ்ருதத்திலேயே அருளியுள்ளார். அவ்வாருக **ஸ்ரீபாஷ்யம்** மற்றும் அதன் டீகையான **ஶ்ருதப்ரகாஶிகை** ஆகியவைகளிலே காணக்கிடைக்கக்கூடிய தத்த்வார்த்தங்கள் ஒன்றையும் விடாமல் மஹாகவிகளும் போற்றும்படியாக இந்த க்ரந்தத்தை ஸ்வாமி அருளிச்செய்துள்ளார். இம்மஹாஸ்வாமியினுடைய **தார்க்கிககுல சக்ரவர்தித்வம்** க்ரோடபத்ரங்களிலே காணக்கிடைக்குமாபோலே, அவர்தம் **கவிகுல கண்டீரவத்வ**மானது இந்த க்ரந்தத்திலே மிகத்தெளிவாகப் புலப்படுகிறது. இந்த திவ்ய க்ரந்தமானது முதல் அத்யாயத்தில் மூன்ருவது பாதத்தில் ஒன்பதாவது அதிகரணமான **அபஶூத்ராதிகரணம்** பர்யந்தமே அருளிச்செய்யப்பட்டுள்ளது. அவ்வரையிலுமே 1500க்கும் மேற்பட்ட ஶ்லோகங்கள் அமைந்துள்ளன.

இதன் வ்யாக்யாநமான மணிமஞ்ஜூஷா என்னும் க்ரந்தமானது தத்த்வரத்நாவளி ஶ்லோகங்களை ப்ரதிபதம் விவரிப்பதாக அமைந்துள்ளது. இந்த வ்யாக்யாந க்ரந்தத்திலே பலவிடங்களிலே இம்மஹாஸ்வாமியினுடைய அப்ரதிம மேதாவிலாஸத்தை வித்வான்கள் ஸாக்ஷாத்கரிக்கலாம். **அகில புவன** மற்றும் **பாராஶர்ய-வசஸ்ஸுதாம்** என்கிற ஸ்ரீபாஷ்ய மங்கள ஶ்லோகங்களினுடைய விவரணப்ரகரணங்களிலே, ஸ்வாமி பல அபூர்வார்த்தங்களை அருளிச்செய்துள்ளார். **அகிலஶப்தார்த்த விசாரம், ஜந்மஶப்தார்த்த விசாரம், ஸம்ஶயபதார்த்த பரிஷ்காரம், த்யாநஶப்தார்த்த நிஷ்கர்ஷம், ஸ்வயம்ப்ரகாஶத்வ அநுமாநவிசாரம்** ஆகிய அத்யாஶ்சர்- யமான அர்த்தவிஶேஷங்கள் திகழ்கின்றன.

இன்றளவு நாம் அறிந்த க்ரந்தங்கள் இவையே. இவைகளிலும் ரத்நபேடீசபேடிகை காணக்கிடைக்காமல் அவ்யக்தமாகவே அமைந்துள்ளது. எம்பெருமானுடைய க்ருபையினுலே ஸ்வாமியினுடைய அனைத்து க்ரந்தங்களும் கிடைக்கப்பேறவேணும் என்று ப்ரார்த்திப்போமாக.

**''தர்க்க த்ரய்யந்தரூபாயாऽப்ரதர்க்ய ப்ரதிப₄ாவதே ।**
**ஸ்ரீநிவாஸமஹார்யாய மஹோதாராய மங்கலம் ॥''**

* * *



http://acharya.org